

திருச்சியில் மேற்கு தொகுதி வேட்பாளரும், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு கிராப்பட்டி பகுதியில் உள்ள கான்வென்ட் ரோடு, அருணாச்சலம் நகர், சிம்கோ காலனி, ஆர்.எஸ்.எம். பிள்ளைத்தெரு, காலனி மெயின் ரோடு, சக்தி விநாயகர் கோவில் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். வழிநெடுகிலும் திரண்டிருந்த மக்கள் அமைச்சர் நேருவுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த பிரச்சாரத்தின் போது, ஒரு தந்தை தனது குழந்தையை அமைச்சரிடம் நீட்டினார். உடனே அக்குழந்தையை வாஞ்சையுடன் தனது பிரச்சார வாகனத்தில் ஏற்றி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த பிரச்சாரத்தின் போது மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, மாவட்ட துணை செயலாளர் முத்து செல்லும் காஜா விஜய் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிராப்பட்டி செல்வம்,மாமன்ற உறுப்பினர் கவிதா செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள் தோழமைக் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்..



சேலம் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சன்னியாசி குண்டு பகுதியில் கழக துணைச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கழக வேட்பாளர். டாக்டர் ஆ க. தருண் அவர்களுக்கு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.



கோவை மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள், வீராங்கனைகள் கூட்டம், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் அறிமுக கூட்டம் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் சூலூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் உள்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியம், பொன்பரப்பி, சிறுகளத்தூர், பொன்குடிகாடு ஆகிய கிராமங்களில் குன்னம் தொகுதி வெற்றி வேட்பாளர் சா.சி.சிவசங்கர் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை உறுதி செய்ய “உதயசூரியன்” சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன், ஒன்றிய பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் வாக்கு சேகரித்தனர்.

# களத்தில் இளைஞர் அணி

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**



ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி, சென்னை மேற்கு மாவட்டம்.



நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, நாமக்கல் கிழக்கு மாவட்டம்.



ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, சேலம் மத்திய மாவட்டம்.



கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி, ஈரோடு வடக்கு மாவட்டம்.



திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, மதுரை தெற்கு மாவட்டம்.



அரூர் சட்டமன்றத் தொகுதி, தருமபுரி கிழக்கு மாவட்டம்.



திருவையாறு சட்டமன்றத் தொகுதி, தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி, திருச்சி தெற்கு மாவட்டம்.



மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி, மதுரை மாநகர் மாவட்டம்.